**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXIII Code of Criminal Procedure)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, SINGAMPUNARI**

**STC. No. 21 /2021 PW .4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : வேலு | தந்தை/கணவர் பெயர்: மருது | |
| ஊர் | : | தாலுகா | : |
| வயது | : | தொழில் | : |
| ஜாதி | : | சமயம் | : இந்து |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 15.07.2026

---

**(எதிரி ஆஜரில்லை. எதிரி சார்பில் BNSS பிரிவு 355ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)**

**15.07.2026 முதல் விசாரணை:**

1. நான் தற்போது அய்யாப்பட்டியில் குடியிருந்து கூலி வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2வது சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **(அந்த கையொப்பம் அ.த.சா.ஆ–2 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. கடந்த 28.05.2020ம் தேதி பகல் 02.00 மணிக்குமேல் எங்கள் ஊரில் நாலுரோட்டில் சக்தி பெட்டிகடை முன்பு இருந்த போது போலீசார் அங்கு வந்து சண்டை நடந்தது சம்மந்தமாக விசாரித்து சண்டை நடந்த இடம், அருகேயுள்ள இடங்களை கேட்டு, விசாரித்து எழுதிக்கொண்டார்கள். அதில் நானும், செந்தில்குமார் என்பவரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். போலீஸ்சார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

2. சம்பவ நடந்ததாக சொல்லப்படும் இடத்தில் சம்பவ சமயத்தில் நான் இல்லை என்றால் சரிதான். 28ம் தேதி தான் போலீஸ்சார் சம்பவ இடத்திற்கு வந்து என்னை விசாரித்தார்கள். அ.சா.1 பெர்னாட்ஷா எனக்கு நண்பர் ஆவார். சக்தி பெட்டி கடைக்கு மேற்கே அய்யாப்பட்டி– முறையூர் வடக்கு நோக்கி செல்லும் ரோட்டில் பாலம் இல்லை என்றால் சரிதான். நாலு ரோட்டிலிருந்து கிழக்கு, மேற்கு பக்கம் செல்லும் ரோடுகளில் பாலம் உள்ளது. அந்த ரோடு தார் ரோடு ஆகும்.

3. எம் . வேலு என்று நான் கையொப்பம் செய்ய மாட்டேன் என்றாலும், மா.வேலு என்ற கையொப்பம் செய்வேன் என்றால் சரியல்ல. இந்த வழக்கின் எதிரிக்கும், எனக்கும் இடையே ஏற்கனவே பிரச்சனை உள்ளது என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் சொன்னநேரத்தில், சொன்ன நேரத்தில் கையொப்பம் செய்யவில்லை என்றாலும், அ.சா.1 எனது நண்பர் என்பதால் அவர் கேட்டுகொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி அரசு மற்றும் குற்றம்சாட்டப்பட்டவர்கள் தரப்பு வழக்குரைஞர்களுக்கு முன்பாக சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
சிங்கம்புணரி.